# உடன்பிறப்பே... 78

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த விருகம்பாக்கம் அரங்கநாதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# விருகம்பாக்கம் அரங்கநாதன்
## ‘இந்தி எதிர்ப்பின் வேள்வித் தீ!’

ஓவியம் : ரவி பேலட்



**1963**-ஆம் ஆண்டு, ஆட்சிமொழிச் சட்டம் கொண்டு வரப்படும் என அறிவித்தது ஒன்றிய அரசு. குறிப்பாக, 1965-ஆம் ஆண்டு குடியரசு நாளுக்குப் பின்னர், ‘இந்தி கட்டாயம்’ என்றும், ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரலாம் என்றும் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. ‘தொடரலாம்’ என்று இருப்பதை ‘தொடரும்’ என்று மாற்ற வேண்டுமென குரல் கொடுத்தது கழகம். இரண்டின் பொருளும் ஒன்றுதான் என்றார், அன்றையப் பிரதமர் நேரு. அப்படியானால், தொடருமென மாற்றுவதில் தயக்கம் என்ன? என நாடாளு மன்றத்தில் கேள்வி எழுப்பினார் பேரறிஞர் அண்ணா. பல எதிர்ப்புகளை மீறி, 1963-ஆம் ஆண்டு, ஏப்ரல் 23-ஆம் தேதி அந்தச் சட்டத்தை நிறைவேற்றியது ஒன்றிய அரசு.

‘ஓடிவந்த இந்திப்பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதல்லவே!” என தனது கால்சட்டைப் பருவத்திலேயே கலைஞரை வீதிக்குக் கொண்டு வந்த போராட்டம், 1938-ஆம் ஆண்டு இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம். அன்றைக்கு, தமிழ் இன, மான, மொழி உணர்வைத் தட்டி எழுப்பிய பெரியாரின் பின்னால், அண்ணாவைப் போன்ற இளைஞர்கள் ஒன்று சேர்ந்தார்கள். மறைமலையடிகள் உள்ளிட்ட சமயப் பற்றாளர்களும் அணி திரண்டார்கள்.

**‘இருப்பது ஓர் உயிர், அது போகப் போவது ஒரு முறை, அது நல்ல காரியத்துக்காக நாட்டுக்காகப் போகட்டுமே’** என்று அன்று தமிழுக்காக உயிர்நீத்தனர் நடராசன்-தாளமுத்து தோழர்கள். 1938-ஆம் ஆண்டு தொடங்கிய அந்தப் போராட்டம், 1940-ஆம் ஆண்டு இந்தி கட்டாயமில்லை என்று அறிவிக்கும் வரைக்கும் நடந்தது. 1948-ஆம் ஆண்டு மீண்டும் இந்தித் திணிக்கப்பட்ட போது, பெரியாரும் அண்ணாவும் போர் பரணி பாடினார்கள். அந்தப் போராட்டமும் இரண்டாண்டு காலம் நீடித்தது. இந்தித் திணிப்புக்கு எதிராக, இப்படி வீரம் செறிந்த போராட்டப் பின்னணி கொண்ட தமிழ்நாட்டில் 1963-ஆம் ஆண்டில் மீண்டும் இந்தித் திணிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது ஒன்றிய அரசு.

### கறுப்பு நாள்

தி.மு.கழகம் போராட்டக் களத்தில் இறங்கியது. 1963-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொதுக்குழு கூட்டப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. பேரறிஞர் அண்ணாவும், போராட்ட செயல்திட்டக் குழுவின் தலைவர் கலைஞரும் வகுத்த களத்தில், மாணவர்கள் - இளைஞர்கள் அணி திரண்டனர்.

1963-ஆம் ஆண்டு ஜூன் பொதுக்குழுவுக்குப் பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், “நமது போராட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து, புதன்கிழமை தலை தேய்த்து முழுகுவதற்கு, வீட்டிற்கு வந்து விடக் கூடியதாக இருக்காது. கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை விட்டு விட்டு, சிறை செல்பவர்கள் “குழந்தை பிறந்து தொட்டிலில் படுத்திருக்கும்போது, சிறையிலிருந்து வந்து விடலாம்” என்று கருத வேண்டாம். இந்தப் போராட்டம் ஒரு நித்திய நிகழ்ச்சியாக - மாதக் கணக்கில் ஆண்டுக் கணக்கில் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் ஈடுபட்டால் போதாது. ஆர்வமும் அவசரமும் கலந்தால் பயனில்லை. யாருடைய ஆர்வம் நீடித்திருக்கிறதோ - யார் யாருடைய வீர உணர்ச்சி நிலைத்திருக்குமோ - யார் யார் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொள்ள முடியுமோ, அப்படிப்பட்டவர்கள்தான் போராட்டத்தில் ஈடுபடலாம்’’ என்று முரசறிவித்தார்.

இரண்டாண்டுகள் நீடித்த, இந்தப் போராட்டம், 1965-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டையே முடக்கியது. அந்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாகத்தான், அந்த ஆண்டு குடியரசு நாளை துக்க நாளாக அறிவித்தார், பேரறிஞர் அண்ணா. உணர்ச்சிக் கொந்தளிப்பான அந்த நாட்களில், பேரறிஞர் அண்ணா , கலைஞர் உள்ளிட்ட முன்னணியினர் 25 அன்று நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். அதே நாளில்தான், திருச்சி ரயில்வே சந்திப்பு அருகே சிங்கத் தமிழர் சின்னச்சாமி என்ற கழக உடன்பிறப்பு தீக்குளித்து மாண்டார்.

> **இன்றைக்கும் படங்களாக, நினைவுச் சின்னமாக மொழியுணர்வை - இன உணர்வை - மான உணர்வை ஊட்டிக் கொண்டிருக்கிறார் அரங்கநாதன்.**

### தீயில் மாண்ட வீரர்கள்

அதே நாளில்தான் சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த கழகத் தொண்டர், நுங்கம்பாக்கம் கிளைக் கழகத்தின் பொருளாளர் சிவலிங்கம் என்ற தோழரும் தீக்குளித்து உயிர் துறந்தார். அவரைப் பார்க்கச் சென்ற விருகம்பாக்கம் கழகத் தோழர் அரங்கநாதன் தனது உடலையும் இந்தி எதிர்ப்பு வேள்விக்கு இரையாக்கினார். இந்தி எதிர்ப்புப் போரில் தீக்குளித்து, இறந்த மூன்றாவது தியாகி விருகம்பாக்கம் அரங்கநாதன்.

அரங்கநாதனின் பெற்றோர் ஒய்யலி-முனியம்மாள். 1931-ஆம் ஆண்டில் டிசம்பர் 27 ஆம் நாளில் அவர்களுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே வீரக் கலைகளில் ஆர்வம் கொண்டிருந்தவர். மான்கொம்பு சுற்றுதல், சிலம்பாட்டம், சுருள்கத்தி போன்ற வீர விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்றவர். விருகம்பாக்கம் இளைஞர்களால் ‘குரு’ என அழைக்கப்பட்டவராக இருந்துள்ளார்.

மத்திய அரசின் தொலைபேசித் துறை ஊழியராகப் பணியாற்றி வந்த அரங்கநாதன், கழகத்தின் ஏடுகளை வரவழைத்து, இளைஞர்களைப் படிக்கச் செய்யும் வகையில் ‘படிப்பகம்’ நடத்தி வந்துள்ளார். அப்பகுதியில் கழகத்தின் வளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டவர் அரங்கநாதன். 1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்.

### நான் தரும் பரிசு

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டவர், 1965-ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று, கோடம்பாக்கம் சிவலிங்கத்தின் உடலைப் பார்த்து வந்த பின்னர் தீவிர சிந்தனையில் இருந்துள்ளார். அடுத்த 2 நாட்களில் தன்னையும் தீக்கு இரையாக்கி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முழக்கத்தை தமிழ்நாடு எங்கும் பற்ற வைத்தார்.

விருகம்பாக்கம் நேஷனல் திரையரங்கம் எதிரே, அவர் தீயில் மாண்டபோது, இந்தித் திணிப்பைக் கண்டித்து ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் அவர் தபால் அனுப்பி வைத்த ரசீதுகளும், முழக்கங்களும் எடுக்கப்பட்டன. அண்ணாவுக்கு, கலைஞருக்கு, நாவலருக்கு என எழுதப்பட்ட கடிதங்கள், அவர் உயிர் உணர்வுக்குச் சான்றாக இருந்தன.

அவர் விட்டுச் சென்ற கடிதத்தில் “இந்தி வெறி பிடித்தவர்களே, இந்திக்கு வால் பிடிப்பவர்களே, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று சொல்லி விட்டு, இந்தியைப் புகுத்துகிறீர்களே! உங்களுக்கு இதோ நான் தரும் பரிசு! தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!” என எழுதப்பட்டிருந்தது.

அடுத்தடுத்த உயிர்ப்பலிகளால் திகைத்த ஒன்றிய அரசு, இந்தித் திணிப்பைக் கைவிட்டு பின்வாங்கியது. 1938-ஆம் ஆண்டில் நடராசன்-தாளமுத்து ஆகியோர் மொழிப்போர்த் தியாகிகளாக உணர்வூட்டியது போல, 1965-ஆம் ஆண்டில் மொழிப்போர்க் களத்தில் விருகம்பாக்கம் அரங்கநாதனும் உயிர் தந்து உணர்வூட்டினார்.

அவர் தமிழுக்காக இறந்தபோது தனது, மூன்று பிஞ்சுக் குழந்தைகளை விட்டுச் சென்றார். அவருக்குப் பின் அரங்கநாதன் குடும்பத்தை, கழகம் அரவணைத்தது. கழகம் ஆட்சி அமைந்தபோது இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டின் கொள்கை என அறிவித்தார் அண்ணா. கலைஞர் தனது ஆட்சிகாலத்தில், சென்னை தியாகராயர் நகரில் சுரங்கப்பாதைப் பாலம் அமைத்தபோது, அதற்கு அரங்கநாதனின் பெயரைச் சூட்டி அவர் நினைவைப் போற்றினார்.

இன்றைக்கும் படங்களாக, நினைவுச் சின்னமாக மொழியுணர்வை - இன உணர்வை - மான உணர்வை ஊட்டிக் கொண்டிருக்கிறார் அரங்கநாதன். மொழிப்போரின் வெப்பம் தமிழகத்தில் நீறுபூத்த நெருப்பு என்பதை, ஒவ்வொரு முறையும் ஒன்றியம் உணரும்.

**...துடிக்கும்**

## அரசுப் பள்ளியில் அறிவியல் ஊக்கம்!



அரசுப் பள்ளி மாணவர்களின் சாதனைகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார், சேலம் மாவட்ட மாணவர் அபிஷேக். ஆத்தூர் அருகே உள்ள ராமநாயக்கன்பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயி செந்தில் என்பவரின் மகனான அபிஷேக், அங்குள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

மாணவன் அபிஷேக், தினமும் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பள்ளிக்கு மிதிவண்டியில் சென்று வந்துள்ளார். அறிவியல் ஆர்வம் கொண்டிருந்த அபிஷேக், பேட்டரி மூலம் தனது மதிவண்டியை இயக்க வேண்டும் என முடிவு செய்து, அதற்கான தேடல்களைத் தொடர்ந்துள்ளார்.

தற்போது, அவரது முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. தனது அறிவியல் ஆசிரியர்கள் உதவியுடன், பேட்டரி மூலம் மிதிவண்டியை இயக்கும் வகையில் வடிவமைத்துள்ளார்.

ஏற்கெனவே 45 நிமிடத்தில் பள்ளிக்குச் சென்று வந்த அவர் தற்போது,15 நிமிடத்தில் சென்று வருகிறார். இந்தத் தகவல்களை அறிந்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மாணவருக்குப் பாராட்டுகளைக் கூறியுள்ளதுடன், அவர் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடவும் வாழ்த்தி இருக்கிறார்.

அரசுப் பள்ளி மாணவர்களின் சாதனைகளில் அபிஷேக் முயற்சி இடம்பெறும், அதேவேளையில், அரசுப் பள்ளிகள், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதை, சமூக வலைதளங்களும் உரத்துப் பேச வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகத்தில் இணைந்த நிகழ்வு!



ஆர்.கே.இராகவன்

2007-ஆம் ஆண்டு, பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், தொரப்பாடி பேரூராட்சியின் இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்தேன். அப்போது, நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தொரப்பாடி பேரூராட்சியில் சுயேட்சையாக நின்று வென்ற பேரூராட்சித் தலைவர், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து, கழகத்தில் இணைந்தார். அந்த நிகழ்வுக்காக தொரப்பாடி பேரூராட்சியிலிருந்து அனைவரும் வருகை தந்தோம். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**- ஆர்.கே.இராகவன், மாவட்டப் பிரதிநிதி, தொரப்பாடி பேரூராட்சி மன்ற உறுப்பினர், கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in


## கருவூலம்
### பள்ளியில் கணினி அறிவியல்!

1999-ஆம் ஆண்டு, கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு, மேல்நிலைப் பள்ளிப் பாடப்பிரிவில் கணினி அறிவியல் பாடத்தை அறிமுகம் செய்தார் கலைஞர். கணினிப் பயிற்சிக்கு ஆசிரியர் பணியிடங்களையும் உருவாக்கினார். 2006-ஆம் ஆண்டு ஆட்சி காலத்தில் 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை கணினி அறிவியல் பாடத்தை அறிமுகம் செய்து, அதற்கான தனிப் புத்தகங்களும் அச்சிடப்பட்டன. ஆனால், அதன்பின் வந்த அ.தி.மு.க. ஆட்சி, கணினி அறிவியல் பாடத்தைக் கைவிட்டு, அறிவியல் புத்தகத்திலேயே கணினி அறிவியலுக்கு 3 பக்கங்கள் மட்டுமே சேர்த்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

620

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.